மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) தற்போது இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பகுதியில் வாழும் பொதுமக்கள் அந்தக் காட்டு நிலங்கள் நல்ல காடாக இல்லை என்று சொல்லி, விவசாயத்திற்கு அளிக்கவேண்டு மென்று கோரிக்கை ஏதாகிலும் தந்து இருக்கிறார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அது தான் தற்போது இல்லை என்று சொன்னேன். கோரிக்கை வரவில்லை. வந்தால் பரி சீலிக்கப்படும்.

* 114 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னிமலை பிர்க்கா காட்டில் (Forest) 50 ஏக்கர் நிலம் திருப்பூர் கூட்டுறவு பால் பண்ணைக்கு ஏலத்தில் விடப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1967-68-ம் ஆண்டில் மேற்படி காட்டிலிருந்து திருப்பூர் கூட்டுறவு பால் சங்கத்திற்கு நிலம் கொடுக்கப் பட்டிருக்கிறதா ? அதற்கான குத்தகை என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : திருப்பூர் கூட்டுறவு பால் பண்ணைக்கு 27—3—1963-ல் 100 ஏக்கர் நிலம் குத்தகைக்கு விடப் பட்டிருந்தது. இன்னும் வாய்பாடி காட்டில் குமாரசாமி என் பவருக்கு 52 ஏக்கர் விடப்பட்டிருந்தது. அந்தக் குத்தகைகள் 1963-66 வரையில் அவை முடிந்து விட்டன. மறுபடியும் நீடிக்க வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் முடிகிறது. இன்னும் ஐந்து நிமிஷம் நீடிக்க அவையின் அனுமதியைக் கோரு கிறேன்.

திருப்பூர் நகரை தொட்டுச் செல்லும் புது பஸ் வழித்தடங்கள்

* 115 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

திருப்பூர் நகரை தொட்டு போகும் முறையில் 6-3-1967-க்கு பின்னர் 23—3—1971 முடிய எத்தனை வழித்தடங்களில் தனியார் பஸ் விடப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன் : திருப்பூர் நகரைத் தொட்டுப் போகும் முறையில் 6—3—1967-க்குப் பின்னர் 23—3—1971 முடிய இருபது உரிமங்கள் தனியார் பேருந்து உரிமை யாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.